பாடம் 7

# உதவி தேவைப்பட்டது

***நீ செய்கிற காரியங்களைத் திட்டமிட்டு, முறையாகச் செய்தது உண்டா? தேவன் தம்முடைய பரிசுத்தஸ்தலத்தை அருமையாக அமைப்பதற்கு முறையாகத் திட்டமிட்டிருந்தார். அதன்படியே இஸ்ரவேலர்கள் அமைத்தனர். தேவனது திட்டங்கள் மிகவும் முக்கியமானவை.***

தேவன் தங்கள்மத்தியில் தமது வீட்டை அமைக்க விரும் பியதால் இஸ்ரவேலர் மிகவும் மகிழ்ந்தார்கள். தேவனுடைய வீட்டை ஆசரிப்புக்கூடாரம் என்று அழைத்தார்கள்.

நாம் தேவனிடம் பேசுவது போல், அவர்கள் தாங்கள் விரும்பும் நேமெல்லாம் தேவ னுடன் பேச வாய்ப்புண்டானது.

அதிக காலம் இஸ்ரவேலர் எகிப்திலே அடிமைகளாக இருந்து, எகிப்திய கடவுள் களை வணங்கியிருந்தனர். எனவே, தங்களை



உண்மையாய் நேசிக்கிற, அன்பான மெய்யான தேவனை அவர்கள் அறியவேண்டியது மிகவும் அவசியமாக இருந்தது. எனவே, இஸ்ரவேலர் மத்தியிலே வாசம்பண்ண தேவன் விருப்பம் கொண்டார். ஏனெனில் தேவனை அவர்கள் நன்றாக அறிந்திருக்கவில்லை. அதனால் விரைவாகவே தேவனை மறந்துவிட வாய்ப் பிருந்தது. தாம் எப்போதும் அவர்களுடனேயே இருக்கி றேன் என்பதை தேவன் அவர் களுக்கு எப்போதும் நினை வூட்ட வேண்டியது அவசிய மாய் இருந்தது. ஆதலால், தேவன் அவர்கள் மத்தியில் இருக்கச் சித்தங்கொண்டார்.

தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தை அமைப்பதற்கு, இஸ்ரவேலர் ஒவ்வொருவரும் விலையேறப்பெற்ற பொருட்களையே கொடுத்தார்கள்.

பொன், வெள்ளி, வெண்கலம் மற்றும் விலை யுயர்ந்த பொருட்கள், இள நீலநூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல், மெல்லிய பஞ்சு நூல், வெள்ளாட்டு

**மனன வசனம்**

**மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள். எபேசியர் 6:8.**

மயிர் போன்றவற்றைக் கொடுத்தார்கள்.

மிகுந்த உற்சாகத்தோடு மிகுதியான காணிக்கைப் பொருட்களைக் குவித்துவிட்டார்கள். எனவே, மோசேயிடம் தேவன், "போதும்! போதும்! இஸ்ரவேலர் ஏராளமாகக் காணிக்கைகளைக் கொண்டுவந்துவிட்டார்கள். இனிமேலும் கொண்டுவர வேண்டாம் என்று சொல்" என்று சொல்லும்படியாயிற்று.

பெரியோர் முதல் சிறியோர் வரை யாவரும் ஓடி ஓடி தேவனுடைய வாசஸ்தலத்தை அமைக்க உதவினார்கள்.

தம்முடைய வாசஸ்தலம் மிகவும் நேர்த்தியாக இருக்க வேண்டுமென்று தேவன் மோசேக்கு யாவையும் விபரமாக, விளக்கமாகக் கூறினார். பரிசுத்த ஸ்தலம் எப்படி இருக்கவேண்டும் என்று ஒரு மாதிரியையும் மோசேக்கு தேவன் காண்பித்தார்.

மேலும், தமது ஆசரிப்புக் கூடார வேலைகளைத் திறம்படச் செய்வதற்குத் தேவையான வேலையாட்களை தேவனே தேர்வுசெய்தார். விநோதமான வேலைகளை யோசித்துச்செய்ய தேவன் இருவரை நியமித்தார். பொன், வெள்ளி, வெண்கலம், இரத்தினம், மரம் போன்றவற்றைக் கொண்டு தேவனுடைய ஆசரிப்புக்கூடாரவேலைகளை மிகவும் சிறப்பாகச் செய்ய பெசலயேல், அகோலியாப் எனும் இருவரை தேவன் தேர்வுசெய்தார். இந்த இருவருக்கும் தம்முடைய வேலையைத் திறம்படச் செய்ய தேவன் ஞானம், புத்தி, அறிவு உண்டாகும்படிக்கு தேவ ஆவியால் அவர்களை நிரப்பினார். பரிசுத்தஸ்தல வேலையைச் செய்த ஒவ்வொருவரையும்



## செய்தி

**தேவனுக்காக என்னால் இயன்றதைச் செய்யும்போது, நான் தேவனைத் தொழுகிறேன்.**

தேவன் ஆசீர்வதித்தார்.


தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி செய்யப்பட்டது. தேவன் சொன்னபடி பத்துக் கற்பலகையையும் ஆரோனின் துளிர்த்த கோலையும், மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரத்தையும் பெட்டியின் உள்ளே வைத்தார்கள்.

இஸ்ரவேலர் தேவனின் ஆசரிப்புக்கூடாரத்தை மிகவும் நேர்த்தியாகக் கட்டி முடித்தனர். தேவபிரசன்னம் அந்த வாசஸ்தலத்தில் இருந்தது.

என் அன்பு பிள்ளையே! தேவனுக்காக நீ செயல்படும்போது, தேவன் உன்னைத் தம்முடைய ஆவியால் நிரப்புவார்; விசேஷமான ஞானத்தைத் தருவார்.

***செய்முறை:*** **தேவனுடைய வேலைகளை நீங்கள் திறம்படச் செய்வதற்கு ஞானம், புத்தி, அறிவு ஆகியவை அவசியம். இம்மூன்றையும் நீங்கள் பெற்றுக்கொள்ளும்படி, யாரை உங்களுக்கு அருள தேவன் ஆயத்தமாக இருக்கிறார்? கேள்விகளுக்கான பதில்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளிலிருந்து எழுதுங்கள். நிழலிடப்பட்டுள்ள கட்டங்களில் கிடைக்கும் வார்த்தைதான் பதில்.**

1. **ஆசரிப்புக்கூடாரம் அமைக்கும்படி மோசேயிடம் சொன்னது யார்?**
2. **அந்த வாசஸ்தலத்தில் என்ன இருந்தது?**
3. **உடன்படிக்கை பெட்டிக்குள் யாருடைய துளிர்த்த கோல் இருந்தது?**
4. **தம்முடைய வாசஸ்தலம் இருக்கவேண்டிய விதம்பற்றி மோசேயிடம் தேவன் எவ்வாறு கூறினார்?**



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | ▒ | | | | | | |
| 2 | | ▒ | | | | | | |
| 3 | | ▒ | | | | | | |
| 4 | | ▒ | | | | | | |

பொன்   தேவன்   வெள்ளி   மோசே   ஆரோன்

விபரமாக   பெசலயேல்   திறமை   எகிப்து   தேவபிரசன்னம்

புதிர் 7